# உங்களுடைய பொறுப்புகள் மற்றும் உங்களுடைய தங்குமிடத்தில் உங்களுக்குப் பிரச்னைகள் இருந்தால் என்ன செய்ய வேண்டும்

ஏப்ரல் 2010

Problems with your accommodation - Tamil

உள்துறை அலுவலகத்தால் (முன்பு NASS தங்குமிடம் என்று அழைக்கப்பட்டது) அளிக்கப்பட்ட தங்குமிடம் சுத்தமாகவும், வசிக்கத்தக்கதாகவும், பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும்.

உங்களுடைய தங்குமிடம் போதுமான தீயணைப்பு வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் ஈரமாகவோ பெரிய பழுதுபார்ப்பு வேலைகள் தேவைப்படுவதாகவோ இருக்கக் கூடாது.

இச்சிற்றேடு உங்களுடைய உரிமைகள் மற்றும் பொறுப்புகளையும் உங்களுக்கு தங்குமிடம் அளிப்பவரின் பொறுப்புகளையும், உங்களுக்கு பிரச்னையிருந்தால் என்ன செய்வது மற்றும் அதற்கு நாங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதையும் கோடிட்டுக் காண்பிக்கிறது.

**தங்குமிடத்தில் வசிக்கும்போது என்னுடைய பொறுப்புகள் என்னென்ன?**

நீங்கள் செய்யவேண்டியவை:

- உங்களுடைய தங்குமிடத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் மற்றும் அறைகலன்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள உபகரணங்களைக் கவனமாக பார்த்துக் கொள்வது .
- உடமை மற்றும் புழங்கும் பகுதிகளைப் பராமரிப்பது. உதாரணமாக, பொதுவான படிக்கட்டுக்களை சுத்தமாகவும் அதன் மீது சொந்தப் பொருட்கள், துணிகள் அல்லது வேறு பொருட்கள் வைக்கப்படாததை உறுதிசெய்வது.
- வீட்டுக் குப்பைகளை முறையாக அகற்றுவது. குப்பைத் தொட்டிகளை அதற்குரிய சரியான இடத்தில் காலிசெய்வது போன்ற செயல்கள் இதில் அடங்கும்,
- உங்களுடன் வேறு யாராவது தங்க அனுமதிப்பதற்கு **முன்** உள்துறை அலுவலகத்திலிருந்து இரவில் விருந்தினர் தங்கி இருப்பதற்காக எழுத்துமூலமாக அனுமதி கேட்டு வாங்குவது.
- ஆறு மாத காலத்திற்குள்ளாக, 14 நாட்களுக்கு (மொத்தம்) மேலாக உங்களுடைய இருப்பிடத்தை விட்டுச் செல்வதற்கு **முன்பாக** உள்துறை அலுவலகத்திலிருந்து எழுத்துமூலமாக அனுமதி கேட்டு வாங்குவது. நீங்கள் உங்களுடைய இருப்பிடத்தை விட்டுச் செல்வதற்கு முன்பு இவ்வனுமதியைப் பெறவில்லை எனில், அது உங்களுடைய இருப்பிடத்தை நீங்கள் இழக்கச் செய்யக்கூடும்.
- **உடமை பற்றிய ஏதாவது பிரச்சினை** இருக்குமானால் அதை இடமளிப்பவருக்கு **கூடுமான வரையில் சீக்கிரம்** தெரிவிப்பது மற்றும்
- பழுதுபார்க்கும் பொருட்டு உங்களுடைய தங்குமிடம் அளிப்பவரை உங்களுடைய இருப்பிடத்தினுள் நுழைய அனுமதிப்பது

Scottish Refugee Council, 5 Cadogan Square, (170 Blythswood Court), Glasgow G2 7PH Tel: 0141 248 9799, Fax: 0141 243 2499,
www.scottishrefugeecouncil.org.uk
Scottish Refugee Council is a charity registered in Scotland.
Registered Charity: SC008639

**என்னுடைய தங்குமிடத்தில் பிரச்சனை என்றால் நான் என்ன செய்ய வேண்டும்?**

உங்களுடைய தங்குமிடத்தில் ஏதாவது பிரச்சினை என்றால், முதலாவதாக நீங்கள் இதை உங்களுடைய தங்குமிடம் அளிப்பவரிடம் தெரிவிக்க வேண்டும். உங்களுடைய இடத்திற்கு நீங்கள் குடிபெயர்ந்த உடனேயே உங்களுடைய தங்குமிடம் அளிப்பவர் அவருடைய தொடர்பு விவரங்களை உங்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். அவர்களுடைய தொடர்பு விவரங்கள் உங்களிடம் இல்லை என்றால், எங்களுடன் தொடர்பு கொள்ளவும். நாங்கள் இப்பிரச்சனையில் உங்களுக்கு உதவ முடியும். எங்களுடைய **இலவச தொலைபேசி எண்: 0800 085 6087** யில் எங்களுடன் தொடர்பு கொள்க. இந்த எண் தரைவழி தொலைபேசியிலிருந்து மட்டுமே அணுகக் கூடியது என்பதைக் கவனிக்கவும்,

தெரிவிக்க வேண்டிய பிரச்சனைகள் கீழ்க்காணும் வரைபடத்தில் கோடிட்டப்பட்டுள்ள விவகாரங்களை உள்ளடக்கியவை என்றாலும், அந்த வரம்பிற்கு மட்டுமே அவை உட்பட்டவையல்ல. இந்த உதாரணங்கள் பிரச்சனைகளுக்கு பதிலளிக்கும் தோராயமான நேரத்தை உள்ளடக்கியுள்ளன.

| **விவகாரம்** | **கவனிக்க/ சரிசெய்வதற்கான நேரம்** |
|---|---|
| எரிவாயு கசிவு, வெள்ளம் அல்லது தீயினால் சேதம் உட்பட பாதுகாப்பற்ற வாழ்நிலை | பிரச்சனை தெரிவிக்கப்பட்ட 2 மணி நேரத்திற்குள்ளாக கவனிக்கப்படும் |
| வென்னீர் கிடையாது, மின்சாரம் கிடையாது, புகை எச்சரிக்கை மணி வேலை செய்வதில்லை போன்ற கடுமையான வாழ்வாதாரப் பிரச்சனைகள் | பிரச்சனை தெரிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் கவனிக்கப்படும் |
| சிறு அடைப்புகள், மேல்பூச்சு பழுதுநீக்கம் அல்லது ஜன்னல்கள் மாட்டிக் கொள்வது போன்ற அவசரமான வாழ்வாதாரப் பிரச்சனைகள் | பிரச்சனை தெரிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக கவனிக்கப்படும். 7 நாட்களுக்குள் பழுது பார்த்திட வேண்டும் |
| சலவை இயந்திரம் வேலை செய்யவில்லை, அறைகலன்கள் மாற்றப்பட வேண்டும் அல்லது வெளி பழுதுபார்ப்புத் தேவை போன்ற வழக்கமான விவகாரங்கள் | பிரச்சனை தெரிவிக்கப்பட்டதிலிருந்து 28 நாட்களுக்குள் சரிசெய்யப்பட வேண்டும் |

சுத்தமான, பாதுகாப்பான மற்றும் பத்திரமான இடத்தில் நீங்கள் வசிப்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு என்பதை நினைவிற் கொள்வது முக்கியம். நீங்கள் உடமை மற்றும் அறைகலன்கள் அல்லது பொருத்திகள், அல்லது அண்டை அயலார் அல்லது பிறரிடமிருந்து யாதொரு உடல் சார்ந்த ஆபத்திற்கும் வெளிப்படும்படி இருக்கக்கூடாது.

உங்களுக்கு தங்குமிடம் அளிப்போர் பிரச்சினைகளை சரிசெய்யவில்லை என்றால், நாங்கள் உங்கள் சார்பில் ஏன் அந்த பிரச்னை சரிசெய்யப்படவில்லை என்று கண்டறிவதற்காக, அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் அல்லது பொருத்தமாயிருப்பின் உள்துறை அலுவலகத்துடன் தொடர்பு கொள்வோம்.

**எனக்கு தங்குமிடத்தை அளிப்பவர் எவற்றுக்கெல்லாம் பொறுப்பாகிறார்?**

வசிப்பதற்கு பாதுகாப்பான மற்றும் சுத்தமான இடம் தவிர, உங்களுக்கு தங்குமிடவசதி அளிப்பவருக்கு கீழ்க்காணுபவற்றிற்கான பொறுப்புகள் உண்டு:

- நீங்கள் வந்து சேர்ந்தவுடன் உங்களுக்குப் புரியும்படியான மொழி ஒன்றில் 'அறிமுக சிற்றுரை' அளிப்பது. உங்களை உங்களின் தங்குமிடத்தைச் சுற்றிக் காண்பிப்பது, பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது என விளக்குவது, உங்களுடைய ஒப்பந்த விவரங்களைக் கோடிட்டுக் காட்டுவது ஆகியவை இதில் உள்ளடங்கும்;
- தேவை என்றால் உரைபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்து தருவது;
- அவசரகாலம் ஒன்றின் போது அவர்களுடன் நீங்கள் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பதற்கான விவரங்களை அளிப்பது
- அறைகலன்கள், நிலையாகப் பொருத்தப்பட்ட உபகரணங்கள், குழாய் வேலை மற்றும் ஏதாகிலும் கட்டமைப்புப் பிரச்சினைகள் ஆகியவை உங்களுடைய அல்லது உங்களுடைய சககுடியிருப்பாளர்களின் தவறான பயன்பாட்டால் ஏற்படவில்லை எனில் இவற்றிற்கான பழுதுபார்க்கும் ஏற்பாடுகளைச் செய்வது மற்றும் கட்டணம் செலுத்துவது.
- எந்தவொரு புகாரும் எவ்வாறு மற்றும் எப்பொழுது சரிசெய்யப்படும் என்பதை உங்களுக்கு எழுத்துமூலமாக விளக்குவது. இது நீங்கள் ஒரு பிரச்சனை/புகாரை எழுப்பியிருக்கிறீர்கள் என்பதற்கான நிரூபணம் ஆகும். மேலும்,
- தங்குமிடத்தைப் பற்றிய் எத்தகைய புகார்களுக்கும் ஒரு நியாயமான காலக்கெடுவிற்குள் பதிலளிப்பது. பிரச்சனையின் தீவிரத்தைப் பொருத்து கால அளவுகள் மாறலாம். மேலும், சில சமயங்களில் தீர்வு காண 28 நாட்கள் வரை ஆகலாம் என்பதையும் கவனித்தில் கொள்ளவும். உதாரணங்களுக்கு இச்சிற்றேட்டின் முந்தைய பக்கத்தில் உள்ள விளக்க அட்டவணையை சரிபார்க்கவும்.

**நான் தொல்லை, வசவு அல்லது தாக்குதல்களை அனுபவித்தால் என்ன செய்ய வேண்டும்?**

நீங்கள் இருப்பது எந்த மாதிரியான தங்குமிடமாக இருந்தாலும், உங்களுக்கு அங்கு பத்திரமான, அச்சுறுத்தல் அல்லது வசவுபற்றிய பயமின்றி வசிப்பதற்கான உரிமை உண்டு. உங்களை யாராவது உங்களின் இனம், நிறம், நாட்டினம், பாலினம், பாலியில் அல்லது நாட்டுப் பூர்வீகம் ஆகியவற்றின் காரணமாக மோசமாக நடத்தினால், அது கடுமையான குற்றச் செயல் மற்றும் சட்டவிரோதமானது ஆகும்.

நீங்கள் முதலாவது செய்ய வேண்டியது உள்ளூர் காவல் துறையைத் தொடர்பு கொண்டு அதுகுறித்து தெரிவிக்க வேண்டும். அவர்கள் சம்பவத்தை புலனாய்வு செய்வர். நீங்கள் ஸ்ட்ரேத்க்ளைட் காவல்துறையை 0141 532 2000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். அவர்கள் உள்ளூர் காவல்துறையின் தொடர்பு விவரங்களை அளிப்பார்கள். உள்ளூர் காவல்துறை உங்களுடைய புகாரைப் பதிவு செய்துகொண்டு உங்களுக்கு உதவுவார்கள்.

உங்களால் காவல்துறையுடன் நேரடியாக பேச முடியவில்லை அல்லது விருப்பமில்லை எனில், நீங்கள் குற்றத்தை இரகசியமாகத் தெரியப்படுத்துவதன் பொருட்டு உங்களுக்கு உதவிட எங்களைத் தொடர்பு கொள்ளவும். மேலும் பொருந்துமிடங்களில், உங்களுக்கு உணர்வுபூர்வமான ஆதரவு அளிக்கக்கூடிய நிறுவனங்களோடு உங்களைத் தொடர்புகொள்ளச் செய்ய எங்களால் இயலும்.

இனம் தொடர்பான தொல்லைகள், வசவுகள் மற்றும் தாக்குதல்களை நீங்கள் பதிவு செய்வது முக்கியம். நீங்கள் செய்ய வேண்டியவை:

- என்ன நடந்தது என்பதைக் கவனிப்பது, அது நடந்த நேரம், தேதி மற்றும் இடம் உள்பட
- ஏதாவது குறிப்புகள், கடிதங்கள், உரைகள் அல்லது உங்களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் கடிதங்கள்
- அந்த நபரின் நடத்தையால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய பிறருடன் பேச வேண்டும் (உதாரணமாக, பிற அண்டைவாழ் மக்கள் அல்லது வாடகைதாரர்கள்)